கனம் திரு. எம். பக்தவத்சலம் : பைனான்ஸ் கமிஷன் இங்கு வந்து நேராக விசாரிப்பதற்கு இன்னும் சிலமாதங்களாகும். விசாரிப்பதற்கு முன்பு என்னென்ன அபிப்பிராயங்கள் கூறுவது என்பதை நாம் உருவாக்கி அதைத் தெரிவிக்கலாம். இப்போது அதைப்பற்றித் தெரிவிப்பதற்கில்லை.

பால் பாயிண்ட் பேனுக்கள்

*2 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்** *(திரு. மு. கருணாநிதி சார்பில்)* : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் "பால் பாயிண்ட் பேனுக்களை" உபயோகிக்கக்கூடாதென அரசாங்கம் ஏதேனும் தடை உத்திரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) and (b) : No. But it has been decided by the Government of India that signature on bills and other documents with money value should be made in ink only. The above decision of the Government of India has been communicated to all the Heads of Departments, etc. for information and guidance.

The objection to accepting signatures on documents by ball point pens is that they are apt to be smudged and fade away after some time. There is also a possibility that such signatures could be forged and altered more easily.

திரு. சா. கணேசன் : பால் பாயின்ட் பென்னால் எழுதும் எழுத்து ஃபேடாகி விடும் என்பதற்காக மட்டும்தான் அதைத் தடை செய்திருக்கிறார்களா ? அல்லது அப்பேனாவின் உதவியால் போடுகிற அல்லது எழுதுகிற எழுத்துக்கள் உண்மையைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாக இல்லை என்றும் அதைத் தடை செய் திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டு காரணங்களும் உண்டு என்றுதான் விடையில் குறிப்பிட்டேன்.

விற்பனை வரி விலக்கு

*3 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்த மீன் விற்பனைக்குக் கொடுத்து வந்த விற்பனை வரிச்சலுகை நிறுத்தப்பட்டதை மீண்டும் வரிச்சலுகை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தூத்துக்குடி ஏற்றுமதி வியாபாரிகள் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?